சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண் :OS:2/2024

2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் சுப்புலட்சுமி (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

22.04.2024

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அசலுடன் ஒப்புகை செய்யப்பட்ட என்னுடைய ஆதார் அட்டை நகலை தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ 1 ஆகும். 15.12.2000 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதியின் தாயார் அளித்த பவர் பத்திரம் அசல் வா.சா.ஆ 2 ஆகும். 15.12.2000 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதியின் தாயார் அளித்த கிரைய ரசீது பத்திரம் அசல் வா.சா.ஆ 3 ஆகும். 10.02.2023 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு (அஞ்சல் ரசீது அசல் ) அலுவலக நகல் வா.சா.ஆ 4 ஆகும். வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ 5 ஆகும். 12.04.2023 தேதியிட்ட வாதியின் வழக்கறிஞருக்கு பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு கை நகல் வா.சா.ஆ 6 ஆகும். வழக்கு சொத்தின் அரசு வழிகாட்டி

மதிப்பு இணையதள நகல் வா.சா.ஆ 7 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை இல்லை.